DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | DVC. No. 07/2023 |
| Deposition of witness | : | P. W – 1 |
| Name | : | லாவண்யா |
| Father's /Husband Name | : | ராமகிருஷ்ணன் |
| Village | : | ஏனக்குடி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 31 |
| Occupation | : | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 30th day December, 2024.
Respondent present.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**

எதிர்மனுதாரருடன் நான் வாழந்து வந்த காலத்தில் எனது பெற்றோரும், எனது சகோதரிகளின் கணவர்களும் எதிர்மனுதாரர் வீட்டிற்கு வந்தார்களா என்றால் சரிதான். அவ்வாறு வந்தவர்கள் என்னை ஒருவாரம் பார்த்துக்கொள்வதாக கூறி நல்லமுறையில் அழைத்துச்சென்றார்கள் என்றால் இல்லை, பிரச்சனை ஏற்பட்டு தான்அழைத்து சென்றார்கள். அவ்வாறு பிரச்சனை நடந்ததாக எனது மனுவில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் எனது வீட்டிற்கு சென்றபிறகு எதிர்மனுதாரர் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டாரா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் தொடர்பு கொண்டார் என்றாலும், அதை மறைத்து நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் பயன்படுத்தி வந்த செல்போனை யாரிடம் உள்ளது என்றால் எதிர்மனுதாரரிடம் தான் உள்ளது. நான் பயன்படுத்திவந்த செல்பேனின் சிம்கார்டு யாரிடம் உள்ளது என்றால் எதிர்மனுதாரரிடம் உள்ளது. போன் மற்றும் சிம்கார்டு என்னிடம் தான் உள்ளது என்றாலும் அதை மறைத்து நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. குடும்பத்தில் நடக்கும் நிகழ்வுகளை எனது நண்பர்களுக்கு நான் போன் மூலம் தகவல் கூறுகிறேன் என்றால் சரிதான். நான் பயன்படுத்திய செல்போனை பார்வையிட்டால் அதில் உள்ள விபரங்கள் தெரியவரும் என்பதால் அது என்னிடம் இல்லை என்று பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு குடிபழக்கம் இல்லை என்றாலும், அவர் குடித்து விட்டு

என்னை அடிப்பார் என்று நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சகோதரியின் கணவர்கள் அவர்கள் வயல்வேலைகள் செய்வது போல் எதிர்மனுதாரரும் செய்ய வேண்டும் என்று கூறியதாலும் அதற்கு எதிர்மனுதாரர் மறுப்பு தெரிவித்ததாலும் நான் அவருடன் வாழ மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னுடைய சேர்ந்து வாழவேண்டி பட்டுக்கோட்டை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அதில் நான் ஆஜர் ஆகியுள்ளேன் என்றாலும், அந்த வழக்கு தற்போதும் நிலுவையில் உள்ளது என்றாலும் சரிதான். பொய்யான விபரங்களை கூறி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், நான் எனது நணபர்களின் ஆலோசனையின் பேரில் செயல்பட்டு வருகிறேன் என்றாலும், நான் மனுவில் கூறியுள்ளதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் பெயரில் நஞ்சை, புஞ்சை நிலங்களோ சொத்துக்களோ இல்லை என்றால் சரிதான். தற்பொழுதும் எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றாலும், நான் தான் சேர்ந்து வாழ மறுக்கிறேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் ஒரு நாளைக்கு ரூபாய் ஐநூறு மட்டுமே சம்பாத்திக்கிறார் என்றால் சரியல்ல. நான் மனுவில் கூறியுள்ளதுபோல் எதிர்மனுதாரர் என்னை எந்த கொடுமையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனுவில் கூறியுள்ள விபரங்கள் பொய்யானனை என்றால் சரியல்ல. மனுவில் கூறியுள்ள பொருட்கள் எதிர்மனுதாரரிடம் இல்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மனு தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்று என்றாலும் சரியல்ல.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.